DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 313/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : நடராஜன் | Calling | : |
| Father / Husband Name | : முத்தையா | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th July 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் பள்ளிதம்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பில்டிங் கன்ஸ்டிரக்சன் வேலை செய்து வருகிறேன். எதிரி ஆரோக்கியம் என்பவரைத் தெரியும். கடந்த 11.06.2021 ம் தேதி மதியம் 02.030 மணியளவில் நான் காளையார்கோவிலிருந்து பள்ளிதம்பத்திற்கு எனது இரு சக்கரவாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது தொண்டி ரோட்டிலிருந்து பள்ளித்தம்பத்திற்கு செல்லும் வழியில் பாலத்திற்கு அருகே ரோட்டின் மேல் 3 நபர்கள் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். நான் பொது இடத்தில் ஏன் மது அருந்துகிறீர்கள் என அவர்களிடம் கேட்டதற்கு அப்போது எனக்கும் அவர்களுக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது.

2) பின்பு அந்த இடத்திற்கு எதிரி ஆரோக்கியம் வந்தார். அவர் என்னைப் பார்த்து மது அருந்திக் கொண்டிருந்தார்கள் பக்கத்து ஊர்க்காரர்கள் என்றும் அவர்களை ஏன் சத்தம்போடுகிறாய் என என்னிடம் வாக்குவாதம் செய்தார். அப்போது ஆரோக்கியம் தொலைபேசியில் தனது மகன் செல்வக்குமாரை அரிவாளை எடுத்துக்கொண்டு வருமாறு சொன்னார். செல்வக்குமார் அங்கு வந்தவுடன் இருவரும்

Web Copy

சேர்ந்து என்னை அடித்து கீழத் தள்ளினார்கள். செல்வக்குமார் எனது நெஞ்சைப் பிடித்து தள்ளினார். அவர் தள்ளிவிட முயற்சித்தபோது செல்வக்குமார் எனது மூக்கை கடித்துவிட்டார்.

3) அதில் எனது மூக்கு துண்டாகி தொங்கிவிட்டது. பிறகு நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். அங்கு வந்த பால்ராஜ், ராஜா ஆகியோர்கள் என்னை சிகிச்சைக்காக தண்டபாணி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக காளையார்கோவில் அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். அதன் பிறகு மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் மூக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளேன். நான் நடந்த சம்பவத்திற்கு எதிரிகள் மீது காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் எப்போது புகார் மனு கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்து சுமார் 2 நாள்கள் கழித்து புகார் மனு கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் தான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். யாரிடம் புகார் மனு கொடுத்தேன் என்றால் உதவி ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்தேன். புகார் மனு யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். புகார் கொடுத்து ரசீது வாங்கினேனா என்றால் வாங்கினேன். எப்போது ரசீது வாங்கினேன் என்றால் புகார் கொடுத்த அன்றே ரசீது வாங்கினேன்.

2) புகார் கொடுத்த அன்று விசாரித்த பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் தொண்டி ரோட்டிலிருந்து எவ்வளவு துாரத்தில் இருக்கும் என்றால் சுமார் 1/2 கிலோ மீட்டர் துாரத்தில் இருக்கும். நான் எப்போது மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை சம்பவம் நடந்து சுமார் 2 நாள்கள் கழித்து சேர்ந்தேன். மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் எத்தனை நாள்கள் சிகிச்சைப் பெற்றேன் என்றால் சுமார் 1 வாரம் சிகிச்சைப் பெற்றேன்.

3) 16.06.2021 லிருந்து 26.06.2021 வரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றேன் என்றால் சரிதான்.

Web Copy

எனக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் நான் முழுமையாக மயக்கம் அடையவில்லை சற்று சுயநினைவோடுதான் இருந்தேன். எதிரி ஆரோக்கியம் வீடு சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 1 கிலோ மீட்டர் துாரத்தில் உள்ளது. செல்வக்குமார் எப்போது சம்பவ இடம் வந்தார் என்றால் சுமார் 4 நிமிடத்தில் வந்துவிட்டார்.

4) போலீசாரிடம் புகார் கொடுக்கும்போது நான் சிகிச்சைப் பெற்ற மருத்துவமனைகளைப் பற்றி கூறியுள்ளேனா என்றால் நான் மனுவில் கூறவில்லை விசாரணையில் கூறினேன். செல்வக்குமார் எந்த பைக்கில் வந்தார் என்றால் எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதி, நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் சென்று அங்கிருந்த நான்கு பேரின் மீது மோதி கீழே விழுந்ததில் தான் எனக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் மனு அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்)திரு.P.செல்வம், 10.07.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No. | : | CC. 313/2022 | Taluk | : | சிவகங்கை |
| Deposition of Witness for | : | PW 2 | Caste | : | |
| Name | : | ராஜா | Calling | : | |
| Father / Husband Name | : | சேசுராஜா | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th July 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் பள்ளிதம்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி ஆரோக்கியம் என்பவரைத் தெரியும். கடந்த 16.06.2021 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் நான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது பள்ளித்தம்பம் ஊருக்கு செல்லும் வழியில் உள்ள பாலத்தின் அருகே உட்கார்ந்து 5 பேர் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு சென்ற நடராஜன் இங்கு ஏன் மது அருந்துகிறீர்கள் என அவர்களிடம் கேட்டார். அப்போது அங்கு வந்த ஆரோக்கியம் நடராஜனிடம் சண்டைப்போட்டுக் கொண்டிருந்தார். பின்பு தனது மகன் செல்வக்குமாருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தார்.

2) அதன் பின்பு அங்கு வந்த செல்வக்குமார் நடராஜனை கீழே தள்ளிவிட்டு தாக்கி அவரது மூக்கை கடித்துவிட்டார். செல்வக்குமார் தாக்கியதில் நடராஜனின் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டது. அதன் பின்பு காயம்பட்ட நடராஜனை சிகிச்சைக்காக காளையார்கோவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) நடராஜன் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் உறவு முறை ஆவார். 2 வது சாட்சி சேசு ராஜ் எனது அப்பா என்றால் சரிதான். 4 வது சாட்சி

webcopy

ஆரோக்கிய பால்ராஜ் எனது மைத்துனர் என்றால் சரிதான். 5 வது சாட்சி பல்தசார் எனது மச்சான் என்றால் சரிதான். 6 வது சாட்சி கஸ்பார் எனது மச்சான் என்றால் சரிதான். 7 வது சாட்சி பங்குராஜ் எனது உறவினர் இல்லை என்றால் சரிதான். 8 வது சாட்சி எனது மைத்துனர் என்றால் சரிதான். 9 வது சாட்சி ஜான் பீட்டர் எனது மைத்துனர் என்றால் சரிதான்.

2) போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எவ்வளவு துாரத்திலிருந்து சம்பவத்தைப் பார்த்தேன் என்றால் 2 பல்லாங்கு துாரத்திலிருந்து பார்த்தேன். எதிரிகளும் அங்கிருந்தவர்களும் என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் எனக்கு கேட்கவில்லை. சம்பவம் முடிந்து எப்போது சம்பவ இடம் சென்றேன் என்றால் சுமார் 3 நிமிடத்தில் சென்றேன். நான் எந்த வாகனத்தில் காயம்பட்ட நடராஜனை அழைத்துச் சென்றேன் என்றால் அவரது இரு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றேன்.

3) நான் மருத்துவமனை சென்றுவிட்டு எவ்வளவு நேரம் கழித்து வீடு திரும்பினேன் என்றால் சுமார் 1/2 மணிநேரம். எந்த மருத்துவமனையில் காயம்பட்ட நபரை சேர்த்தோம் என்றால் காளையார்கோவிலில் உள்ள தண்டபாணி மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரிக்கும்போது செல்வக்குமார் தான் நடராஜனின் மூக்கை கடித்தார் என்பதை கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 10.07.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Webcopy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 313/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 3 | Caste | : |
| Name | : ஆரோக்கிய பால்ராஜ் | Calling | : |
| Father / Husband Name | : டேவிட் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th July 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் பள்ளிதம்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி ஆரோக்கியம் என்பவரைத் தெரியும். கடந்த 16.06.2021 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் நான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது பள்ளித்தம்பம் ஊருக்கு செல்லும் வழியில் உள்ள பாலத்தின் அருகே உட்கார்ந்து 5 பேர் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு சென்ற நடராஜன் இங்கு ஏன் மது அருந்துகிறீர்கள் என அவர்களிடம் கேட்டார். அப்போது அங்கு வந்த ஆரோக்கியம் நடராஜனிடம் சண்டைப்போட்டு அவரை அடித்துவிட்டார். பின்பு தனது மகன் செல்வக்குமாருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு அரிவாளை எடுத்து சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தார்.

2) அதன் பின்பு அங்கு வந்த செல்வக்குமார் நடராஜனை கீழே தள்ளிவிட்டு தாக்கி அவரது மூக்கை கடித்துவிட்டார். செல்வக்குமார் தாக்கியதில் நடராஜனின் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டது நடராஜனின் மூக்கு துண்டாகி தொங்கிவிட்டது. அதன் பின்பு காயம்பட்ட நடராஜனை சிகிச்சைக்காக

Web Copy

காளையார்கோவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எவ்வளவு துாரத்திலிருந்து சம்பவத்தைப் பார்த்தேன் என்றால் சுமார் 10 அடி துாரத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன். நான் எத்தனை ஆடுகள் வைத்துள்ளேன் என்றால் 7 ஆடுகள் வைத்துள்ளேன். எத்தனை மணிக்கு நடராஜனை மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் சுமார் 03.00 – 03.30 மணியளவில் சேர்த்தோம். சம்பவ இடத்திற்கு ஆரோக்கியம் எப்போது வந்தார் என்றால் சுமார் 02.45 மணியளவில் வந்தார். ஆரோக்கியத்திற்கும் நடராஜனுக்கும் எவ்வளவு நேரம் சண்டை நடந்தது என்றால் சுமார் 5 நிமிடங்கள் நடந்தது. ஆரோக்கியத்தின் மகன் செல்வக்குமார் எப்போது வந்தார் என்றால் சுமார் 5 நிமிடத்தில் வந்தார். நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் நான் சம்பவ சமயத்தில் ஆடு மேய்க்கவும் இல்லை என்றும் பாதிக்கப்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 10.07.2025,**

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.

Web Copy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 313/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 4 | Caste | : |
| Name | : பாத்திமா நாதன் | Calling | : |
| Father / Husband Name | : சேசுராஜ் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th July 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் பள்ளிதம்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 20.06.2021 ம் தேதி மாலை 05.00 மணியளவில் போலீசார் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், ஜான் பீட்டர் என்பவரும் கையொப்பம் செய்தோம். மேற்படி ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். எந்த போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் காளையார்கோவில் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் எழுதாத பேப்பரில்

Web Copy

**கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் சம்பவம் நடந்தது பற்றி விசாரித்து எழுதினார்கள். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் போலீசார் என்னிடம் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் வாங்கவில்லை என்றாலும் பாதிக்கப்பட்ட நபர் எனது உறவினர் என்பதாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 10.07.2025,**

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.

Web Copy